

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (16.06.2025) சென்னை, தேனாம்பேட்டை. டிஎம்எஸ் வளாகத்தில் உள்ள 108 சேவை மையத்தில் பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள நீட் தேர்வு எழுதிய மாணவ, மாணவியர்களுக்கு மனநல ஆலோசனை வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்து ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மரு.எழிலன் நாகநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் மரு.வினித், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.இராஜமூர்த்தி மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

### என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமை! ஆ.இராசா எம்.பி. - தயாநிதி மாறன் எம்.பி. - எம்.கே.மோகன் எம்.எல்.ஏ. - நா.எழிலன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# சென்னை மேற்கு மாவட்டம் - கழக சட்டத்துறை சார்பில் தேர்தல் பயிற்சி பாசறைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!

சென்னை, ஜூன்.17-

தி.மு.க. சட்டத்துறை சார்பில் சென்னை மேற்கு மாவட்டம் டி.எல்.சி., சி.எல்.சி., எப்.எல்.சி. 2026 - சட்டமன்ற தேர்தல் பயிற்சி பாசறை கூட்டம் கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என். ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில் இன்று நடைபெறுகின்றது.

இதில் கழக துணை பொதுச்செயலாளர் மற்றும் மண்டல பொறுப்பாளர் ஆ.ராசா எம்.பி., தயாநிதி மாறன் எம்.பி., எம்.கே. மோகன் எம்.எல்.ஏ., நா. எழிலன், எம்.எல்.ஏ., ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர் என மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு அறிக்கையில் தெரிவித்தார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-

தி.மு.க. சட்டத்துறை சார்பில் சென்னை மேற்கு மாவட்டம், DLC, CLC, FLC, 2026சட்டமன்ற தேர்தல் பயிற்சி பாசறை கூட்டம் இன்று (17.06.2025 - செவ்வாய் கிழமை) மாலை 4.00 மணி அளவில் அமைந்தகரை, LKN திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. நடைபெறும் 2026சட்டமன்ற தேர்தல் பயிற்சி பாசறை கூட்டத்தில் மூத்த வழக்கறிஞர் சட்டத்துறை மாநில செயலாளர் என். ஆர்.இளங்கோ எம்.பி அவர்கள் தலைமை தாங்கி கருத்துரை ஆற்றுகிறார். (சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு) எனது முன்னிலையில் இக்கூட்டம் நடைபெறுகிறது.

கழக துணைப் பொதுச் செயலாளர் மற்றும் மண்டல பொறுப்பாளர் ஆ. ராசா, எம்.பி. மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன், எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் எம். கே.மோகன், நா.எழிலன் ஆகியோர் கலந்துகொள்கிறார்கள். இந்நிகழ்வில் பகுதிக் கழக செயலாளர்கள், தொகுதி பொறுப்பாளர்கள், தலைமைக் கழக வழக்கறிஞர்கள் மற்றும் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட கழக வழக்கறிஞர்கள், வட்டக்கழக செயலாளர்கள் என அனைவரும் பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### முதல்வர் தலைமையிலான திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு - கடந்த 4 ஆண்டுகளில் மட்டும்

# மாணவி கிருத்திகா போல 900க்கும் மேற்பட்ட அரசுப்பள்ளி மாணவர்கள் - தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் தேர்வு!

## பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெருமிதம்!



சென்னை, ஜூன்.17-

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் ‘எக்ஸ்’ தள பதிவு வருமாறு:-

“மாணவி கிருத்திகா கல்வியால் பெற்ற வெற்றியை அவ்வூர் மக்கள் அன்பொழுகக் கொண்டாடுகிறார்கள். அந்தக் கொண்டாட்டத்தில் நாங்களும் மகிழ்ச்சி அடைகிறோம்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு அமைந்த பிறகான நான்கு ஆண்டுகளில் மட்டும் மாணவி கிருத்திகாவைப் போல 900க்கும் மேற்பட்ட அரசுப் பள்ளி மாணவர்கள் தலைசிறந்த உயர் கல்வி நிறுவனங்களில் தேர்வாகியுள்ளார்கள்.

இந்நேரத்தில் அம்மாணவர்கள் அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் கூடவே பயணிக்கிறோம். மகிழ்ச்சியோடும் தன்னம்பிக்கையோடும் படியுங்கள்.”

இவ்வாறு அப்பதிவில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யமொழி பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

### வருகிற 19-ஆம் தேதி மாலை நடைபெறுகிறது

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் வருகிற 19.6.2025 வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் - கண்டோன்மெண்ட் ஜோதி திரையரங்கம் அருகில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி,எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மற்றும் மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் - மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:-

1. வீடு வீடாகச் சென்று கழக உறுப்பினர்கள் சேர்க்கை குறித்து.
2. கழக வளர்ச்சிப் பணி.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**

செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

# சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. அணிகளின் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!



சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. அணிகளின் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் து.விக்டர் தலைமையில் இன்று (17.06.2025) செவ்வாய் கிழமை காலை 9.00 மணியளவில் மாவட்டக் கழக அலுவலகம் அமைந்துள்ள எண்.20/32, காம்தார் நகர் முதல் தெரு, நுங்கம்பாக்கத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட, அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட தலைவர், துணை துலைவர், துணை அமைப்பாளர்கள் ஆகிய அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப்பணிகள்

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.லோகேஷ் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய-நகர-பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :-

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 17.06.2025 | மீஞ்சூர் கிழக்கு ஒன்றியம் | வெள்ளிவாயல் சாவடி | முனைவர் பொன்னேரி சிவா, கா.ராஜராஜேஷ்வரி |
| 2 | | மீஞ்சூர் தெற்கு ஒன்றியம் | சோம்பட்டு | தூத்துக்குடி எட்டையபுரம் தமிழ்ப் பிரியன், ஆஷிகா பர்வின் |
| 3 | | மீஞ்சூர் பேரூர் | பஜார் வீதி, மீஞ்சூர் | தமிழ் சாதிக், ஜெ.பாலசந்தர் |
| 4 | 19.06.2025 | பூண்டி வடக்கு ஒன்றியம் | ஒதப்பை | கா.ராஜராஜேஷ்வரி |
| 5 | | பூண்டி கிழக்கு ஒன்றியம் | சீத்தஞ்சேரி | விக்னேஷ் உதயன் |
| 6 | 20.06.2025 | எல்லாபுரம் வடக்கு ஒன்றியம் | வடமதுரை | எழும்பூர் கோபி, விக்னேஷ் உதயன் |
| 7 | | எல்லாபுரம் தெற்கு ஒன்றியம் | கன்னிகைப்பேர் | ‘முரசொலி’ மூர்த்தி |
| 8 | | ஊத்துக்கோட்டை பேரூர் | பேரூராட்சி அலுவலகம் பின்புறம் | ‘குடியாத்தம்’ பாரி |
| 9 | 22.06.2025 | மீஞ்சூர் வடக்கு ஒன்றியம் | திருப்பாலைவனம் | வாசு கருணாநிதி |
| 10 | | பொன்னேரி நகரம் | அம்பேத்கர் சிலை அருகில் | நாகம்மை கருப்பையா, ஆஷிகா பர்வின் |
| 11 | | சோழவரம் வடக்கு ஒன்றியம் | மாதவரம் | கா.ராஜராஜேஸ்வரி |
| 12 | | ஆரணி பேரூர் | பஜார் வீதி | ஜெ.பாலசந்தர் |
| 13 | 30.06.2025 | கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றியம் | அமரம்பேடு | ‘அத்திப்பட்டு’ சாம்ராஜ் |
| 14 | | கும்மிடிப்பூண்டி கிழக்கு ஒன்றியம் | பெத்திக்குப்பம் | ஆஷிகா பர்வின் |
| 15 | | கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியம் | கவரைப்பேட்டை | வண்ணை புகாரி, விக்னேஷ் உதயன் |
| 16 | | கும்மிடிப்பூண்டி பேரூர் | கோட்டக்கரை | திருச்சி சேகர், ஜெ.பாலசந்தர் |

திருவள்ளூர்

நாள் : 16-06-2025



### உச்சநீதிமன்ற நீதியரசர் எம்.எம்.சுந்தரேஷின் தந்தை

# மூத்த வழக்கறிஞர் வி.கே.முத்துசாமி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன்.17-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :-

மாண்பமை உச்சநீதிமன்ற நீதியரசர் எம். எம். சுந்தரேஷ் அவர்களின் தந்தையும் மூத்த வழக்கறிஞருமான வி.கே.முத்துசாமி அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த துயருற்றேன்.

வளர்த்து ஆளாக்கி, அவையத்து முந்தி இருப்பச் செய்த அருமைத் தந்தையினை இழந்து தவிக்கும் நீதியரசர் திரு. சுந்தரேஷ் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### கழக துணை பொதுச்செயலாளர் ஆ.ராசா, எம்.பி. பங்கேற்பு!

### மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் முன்னிலை!

# சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகள் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி, ஆயிரம் விளக்கு, அண்ணாநகர் ஆகிய தொகுதிகளின் பாக முகவர்கள் (BLA2) கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!



சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி, ஆயிரம்விளக்கு, அண்ணாநகர், ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் பாகமுகவர்கள் (BLA2) கூட்டம் 18.06.2025 - புதன் கிழமை கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளரும், மண்டல தேர்தல் பொறுப்பாளருமான ஆ.ராசா,எம்.பி அவர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார். கழக விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில செயலாளரும், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் முன்னிலை வகிக்கின்றார்.

| வ.எண். | சட்டமன்ற தொகுதி | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1. | சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி மற்றும் ஆயிரம் விளக்கு | காலை 9.00 மணி | எம்.எல்.எம். கல்யாண மண்டபம், மகாலிங்கபுரம், சென்னை-34. |
| 2. | அண்ணாநகர் | மாலை 3.00 மணி | அகர்வால் சபா பவன் சாந்தி காலனி, அண்ணாநகர், சென்னை-40. |

மேற்கண்ட பாக முகவர்கள் (BLA2) கூட்டத்திற்கு சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள், **வட்டக்** கழக செயலாளர்கள், பாகமுகவர்கள் (BLA2) மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.